**கவனிக்க.**- *2023.05.12 ஆந் திகதிய 2332 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வரத்தமானியின் பகுதி I : தொகுதி III பகுதி II மற்றும் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2333 - 2023 මැයි මස 19 වැනි සිකුරාදා - 2023.05.19

*2333 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 540 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |
| வரவு செலவுத் திரட்டுகள் | 542 |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 546 |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2023, யூன் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, மே மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

### 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை

### *1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆவது பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

*1987 ஆம் அண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1) ஆவது பிரிவின் கீழ் மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் ஹாரிஸ்பத்துவ பிரதேச சபைக்குள் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் ஹாரிஸ்பத்துவ பிரதேச சபைக்குச் சொந்தமான பாதையென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இப்பிரதேசத்தின் பொதுமக்கள் அல்லது பாதையுடன் சம்பந்தப்படும் காணி உரிமையாளர்கள் எவரும் இருப்பின், தமது உரித்துரிமையை அல்லது எதிர்ப்பைக் காட்ட வேண்டுமெனின், இந்த வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட ஒரு மாத காலத்துக்குள் தமது உரித்துரிமையை நிரூபிப்பதற்கென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின 24(2) ஆவது பிரிவின்படி செயற்படுமாறு அறிவிக்கப்படுகின்றது.*

*இந்தக் கால எல்லைக்குள் எதிர்ப்புகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை எனின், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(3) ஆவது பிரிவின் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் ஹாரிஸ்பத்துவ பிரதேச சபைக்கு உரித்தான பாதையாகக் கொள்ளப்பட்டு நிரந்தரமாகப் பராமரிக்கப்பட்டு வரும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*சீ. பி. நவரத்ன,*
*செயலாளர்,*
*ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை.*

**அட்டவணை**

| | |
|---|---|
| *1. பாதையின் பெயர்* | *: தொட்டபிட்டிய வத்த ஊடாக அரம்பேகம சனசமூக மண்டபம் வரை செல்லும் பாதை* |
| *கிராம அலுவலர் பிரிவு* | *: அரம்பேகம - 470* |
| *பாதையின் பெயர்* | *: தொட்டபிட்டிய வத்த ஊடாக அரம்பேகம சனசமூக கண்டபம் வரை வெல்லும் பாதை* |
| *ஆரம்பம்* | *: தொட்டபிட்டிய வத்த* |
| *முடிவு* | *: ஆரம்பேதம் அனசமூக் மண்டபம்* |
| *இடதுபுறம்* | *:1. திருமதி எச்.எம். சந்திரா குமாரி, 191/ஏ/3, கும்புருவலதென்ன, வெரல்லகம.*<br>*2. திரு. எச். எம். சீ. என். கே. விஜேரத்ன, 191/ஏ/2 , கும்புருவலதென்ன, வெரல்லகம.*<br>*3. திருமதி எச்.எம். பொடி மெனிகே, 191/ஏ, அமுஹேனேகெதர, கும்புருவலதென்ன, வெரல்லகம.* |
| *வலதுபுறம்* | *1. திரு. என். பி. சீ. அல்விஸ், 191/சி, அமுஹேனேகெதர, கும்புருவலதென்ன, வெரல்லகம.*<br>*2. திருமதி எஸ். எம். தயமந்தி குமாரி, 191, கும்புருவலதென்ன, வெரல்லகம.*<br>*3. திரு. பி. ஈ. எம். விஜேரத்ன, 191/பி, கும்புருவலதென்ன, வெரல்லகம.* |
| *பாதையின் அகலம்* | *: 10 மீற்றர்* |
| *பாதையின் நீளம்* | *: 800 மீற்றர்* |
| *நில வரைபடம்* | *: நில அளவையாளர் திரு. ஏ. ஏ.ஜே. பண்டார என்பவரால் அளவிட்டு வரையப்பட்டது, இலக்கம் 8220* |

*05-168*

## யாழ்ப்பாணம் மாநகர சபை

*1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களரிகளுக்கு உரிமம் அளித்தற் கட்டளைச்சட்டம் 6(சி) 1 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*இதன் கீழ் காட்டப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட நபர்கள் அவர்கள் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் அவர்களின் பெயர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள களரிகளை 2023 ஆம் ஆண்டில் வைத்திருப்பதற்காக 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களரிளுக்கு உளித்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 6(சி) 1 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.*

*இத்தகைய உரிமம் அந்தக்களரி உரிமையாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும் சொல்லப்பட்ட களரிகளுக்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் வளவுக்கு அண்மையில் வதியும் எந்த ஆளும் அன்னாரின் ஆட்சேபனைக்காக காரணங்கள் பற்றிய எழுத்து மூலமான கூற்றொன்றினை இவ்வர்த்தமானியில் இவ் அறிவித்தல் வெளியிடப்படும் திகதியில் இருந்து நான்கு வாரங்களுக்குள் இணைப்பிரதிகளில் எனக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.*

*இ.த.ஜெயசீலன்,*
*மாநகரஆணையாளர்,*
*மாநகர சபை,*
*யாழ்ப்பாணம்.*

*மாநகரசபை அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*2023, மே 02.*

**அட்டவணை**

| இல. | விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் | களரியின் தலைவரா, செயலாளரா, முகாமையாளரா என்பது | களரியின் பெயர் | களரி அதனது செயற்பாடுகளை நடாத்த உத்தேசித்திருக்கும் மனைத்தளம் |
|---|---|---|---|---|
| 1. | தே. சுதன் கந்தரோடை மேற்கு, சுன்னாகம். | செயலாளர் | செவண்லெவன் பொழுது போக்கு விளையாட்டுக் கழகம். | இல. 66, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பானம். |

*05-183*

---

## பெலியத்த பிரதேச சபை

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிருவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணை விதிச் சட்டங்கள்) சட்டம்*

*261 ஆவது அதிகார சபையின் 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிருவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணை விதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (i) ஆம் உப பிரிவின் படி வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் பெலியத்த பிரதேச சபையினால் 2023.04.11 ஆந் திகதி நடத்தப்பட்ட நிதிக் குழுக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 33 இன் கீழ் பின்வரும் கருத்தை தீர்மானித்ததாக பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

*செயலாளர்,*
*பெலியத்த பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*பெலியத்த.*
*2023, ஏப்பிறல் 19.*

**தீர்மானம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (தொடர்ச்சியான ஒழுங்குவிதிகள் ) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (அ) அத்தியாயத்தில் வாசிக்கப்பட்டதும், 261 ஆம் அதிகாரத்தின்படி 1952 ஆம் இலக்க உள்ளூராட்சி நிருவன (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தில் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் கிடைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் தென் மாகாணத்தின் உள்ளூராட்சி நிருவன விடயப் பொறுப்பமைச்சருக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரமும் தயாரிக்கப்பட்டதும் தென் மாகாணத்தின் உள்ளூராட்சி நிருவன விடயப் பொறுப்பமைச்சரினால் தயாரிக்கப்பட்டதும் 2013.05.17 ஆம் திகதிய 1811 இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் 5(அ) பகுதியில் விளம்பரப்படுத்தப்பட்ட அறிவித்தலில் பிரகடனப்படுத்தப்பட்ட 2014.10.28 ஆந் திகதிய சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 08(1) இன் கீழ் சபை ஏற்றுக்கொண்டு 2015.01.09 ஆந் திகதிய இலக்கம் 1897 ஆம் இலக்க வர்த்தமானியில் விளம்பரப்படுத்தி செயற்படுத்தப்பட்ட துணைவிதி.*

*சட்ட தொகுதியின் இலக்கம் XXVII ஆம் இலக்கம் கொண்ட விளம்பர அறிவித்தல் தொடர்பான துணைவிதியை ஏற்றுக்கொள்வதை இதன்படி இரத்துச் செய்து 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (தொடர்ச்சியான ஒழுங்குவிதிகள் ) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (அ) அத்தியாயத்தில் வாசிக்கப்பட்டதும், 261 ஆம் அதிகாரத்தின் 1952 ஆம் இலக்க உள்ளூராட்சி நிருவன (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தில் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் தென் மாகாண சபையின் உள்ளூராட்சி வீடு மற்றும் வீடமைப்பு அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட 1988.08.23 ஆம் திகதிய 520/7 மற்றும் 1991.02.01 ஆந் திகதிய 648 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரத்தில் விளம்பரப்படுத்தி அனுமதிக்கப்பட்டதும் பெலியத்த பிரதேச சபையினால் 1998.10.28 ஆந் திகதி நடத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 08 (IV) இன் கீழ் ஏற்றுக் கொண்டு 1999.02.15 ஆந் திகதிய 1066 ஆம் இலக்க வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்ட துணைவிதிச் சட்டத்தின் 11 ஆம் பகுதியின் 39 ஆம் விளம்பர அறிவித்தல் மற்றும் கற்புலனாகும் சூழல் வரி தொடர்பான துணைவிதியை மீண்டும் ஏற்றுக்கொள்ளல் தொடர்பாக நிதி மற்றும் கொள்கைகள் குழு கூட்டத்திற்கு கருத்துத் தெறிவித்துள்ளது.*

*05-256*

---

## வரவு செலவுத் திரட்டுகள்

**பன்னல பிரதேச சபை**

நிதி வெளியீட்டினை பிரசித்தப்படுத்தல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் கீழ் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரப்படி பன்னல பிரதேச சபையின் செயலாளர் ஜே.ஏ.ஜயசிங்ஹ ஆகிய நான், பிரதேச சபையின் 2022/12/31 ஆந் திகதி இறுதி ஆண்டிற்காக நிதி வெளியீட்டினை பிரசித்தப்படுத்துவதற்கு 2023.05.08 ஆந் திகதி முகாமைத்துவக் குழுத் தீர்மானம் 02 ஆம் இலக்கத்தினால் தீர்மானிக்கப்பட்ட தீர்மானத்தின் கீழ் என்னால் தீர்மானிக்கப்பட்டது பற்றி இத்தால் அறிவித்தல் விடுகின்றேன்.*

ஜே.ஏ.ஜயசிங்ஹ (வே.பா.),
செயலாளர் மற்றும் அதிகார செயற்பணி,
கடமைகளை செயற்படுத்தும் உத்தியோகத்தர்,
பன்னல பிரதேச சபை.

*பிரதேச சபை அலுவலகம்,*
*பன்னல.*
*2023, மே 08.*

**பன்னல பிரதேச சபை**

*2022, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவடையும் ஆண்டுக்காக*
*நிதி நடவடிக்கை பற்றிய அறிவித்தல்*

| குறிப்பு | | 31.12.2022 | 31.12.2021 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| நிலையற்ற சொத்துக்கள் | | | |
| சொத்து: தாவரங்கள் மற்றும் உபகரணங்கள் | 06 | 475,166,953.60 | 398,023,364.98 |
| **நிலையற்ற சொத்துக்கள்** | | | |
| மொத்த | 07 | 4,383,484.36 | 3,225,079.55 |
| பணியாளர் கடன்களும் முற்பணமும் | 08 | 9,357,495.33 | 9,247,938.62 |
| கிடைக்க வேண்டியவை | 09 | 484,270,080.78 | 428,656,079.53 |
| முதலீடு | 10 | 27,668,271.30 | 36,149,402.62 |
| நிதி மற்றும் நிதிக்கு சமமானவை | 11 | 39,349,079.35 | 43,016,888.76 |
| **மொத்த சொத்து** | | **1,040,195,364.72** | **918,318,754.06** |
| **பொறுப்புக்கள்** | | | |
| நிலையற்ற பொறுப்புக்கள் | 12 | 0.00 | 0.00 |
| நிலையற்ற பொறுப்புக்கள் | 13 | 346,012,351.17 | 378,053,272.92 |
| உரிமைகள் | 14 | 694,183,013.55 | 540,265,481.14 |
| **மொத்த உரிமைகளும் பொறுப்புக்களும்** | | **1,040,195,364.72** | **918,318,754.06** |

**பன்னல பிரதேச சபை**

*2022 திசம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவடையும் ஆண்டுக்காக
நிதி நடவடிக்கை பற்றிய அறிவித்தல்*

| | | குறிப்பு | 31.12.2022 | 31.12.2021 |
|---|---|---|---|---|
| **இயக்கமற்ற வருவாய்** | | | | |
| அரசின் பங்களிப்பு - மீள்வருன | | 01 | 243,265,123.61 | 199,769,412.70 |
| வேறு வருவாய் | | 02 | 54,155,918.89 | 48,427,956.17 |
| மொத்த இயக்கமற்ற வருவாய் | A | | 297,421,042.50 | 248,197,368.87 |
| இயக்கமற்ற செலவு | | | | |
| மீள்வரும் செலவு | | 03 | 200,480,672.25 | 163,954,633.59 |
| மொத்த செயற்பாட்டு செலவு | B | | 200,480,672.25 | 163,954,633.59 |
| ஆண்டுக்கான செயற்பாட்டு மேலதிகம் /குறைபாடு | | A - B = C | 96,940,370.25 | 84,242,735.28 |
| மூலதன கிடைப்பனவு | D | 04 | 28,296,288.01 | 276,765,248.22 |
| மூலதன செலவு | E | 05 | 41,759,187.34 | 334,724,462.28 |
| ஆண்டுக்கான | | | | |
| மேலதிகம் /குறைபாடு | | C+D-E=F | 83,477,470.92 | 26,283,521.22 |

**பன்னல பிரதேச சபை**

*2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவடையும் ஆண்டுக்கான நிதி நடவடிக்கை அறிக்கை*

| | | | 2022.12.31 | 2021.12.31 |
|---|---|---|---|---|
| **செயற்பாடு நடவடிக்கைகளினால் கிடைக்கப் பெற்ற நிதி நிலை** | | | | |
| சாதாரண செயற்பாட்டினால் கிடைக்கப் பெற்ற மேலதிகம் /குறைபாடு | | | 96,940,370.25 | 84,242,735.28 |
| முன்னைய ஆண்டிற்கான சரிசெய்தல் | | | -6,703,527.13 | 48,631,730.24 |
| நிதிக் குழுவின் மாற்றங்களுக்கு முன் செயற்பாட்டினால் கிடைக்கப் பெற்ற மேலதிகம் /குறைபாடு | | | 90,236,843.12 | 132,874,465.52 |
| மொத்த கடனாளிகளின் மற்றைய கிடைப்பனவு - அதிகரிப்பு /குறைப்பு | | | -48,400,831.45 | -91,374,140.51 |
| கடன் பெறுபவர்களுக்கு செலுத்த வேண்டியவை அதிகரிப்பு /குறைப்பு | | | -32,040,921.75 | 37,345,334.70 |
| **01. செயற்பாடுகளினால் கிடைக்கப் பெற்ற தேறிய நிதி நிலை** | | | 9,795,089.92 | 78,845,659.71 |
| **முதலீட்டு செயற்பாட்டினால் கிடைக்கப் பெற்ற நிதி நிலை** | | | | |
| சொத்துக்களை கையேற்றல், அகற்றுதல் | | | -77,323,064.89 | -13,833,444.66 |
| மூலதன செலவு | | | 35,563,877.55 | -320,891,017.62 |
| **02. முதலீட்டு செயற்பாட்டினால் கிடைக்கப் பெற்ற தேறிய நிதி நிலை** | | | -41,759,187.34 | -334,724,462.28 |
| **முதலீட்டு செயற்பாட்டினால் கிடைக்கப் பெற்ற தேறிய நிதி நிலை** | | | | |
| மூலதன கிடைப்பனவு | | | 28,296,288.01 | -276,765,248.22 |
| கடன் மீள் செலுத்துதல் | | | 0.00 | -5,152,661.26 |
| **03. நிதி செயற்பாட்டினால் கிடைக்கப் பெற்ற தேறிய நிதி நிலை** | | | 28,296,288.01 | 271,612,586.96 |
| ஆண்டினுள் தேறிய நகர்வுகள் (1+2+3) | | | -3,667,809.41 | 15,733,784.39 |
| ஆண்டு ஆரம்பத்தில் நிதி மற்றும் நிதிக்கு சமமானவை | | | 43,016,888.76 | 27,283,104.37 |
| ஆண்டு இறுதியில் நிதி மற்றும் நிதிக்கு சமமானவை II | | | 39,349,079.35 | 43,016,888.76 |
| குறிப்பு II | இலங்கை வங்கி நடைமுறை கணக்கு | 3003334 | 24,416,755.43 | 29,607,343.44 |
| | இலங்கை வங்கி நடைமுறை கணக்கு | 3003340 | 9,399,520.89 | 10,402,271.74 |
| | இலங்கை வங்கி நடைமுறை கணக்கு | 73559037 | 4,046,853.82 | 2,315,311.37 |
| | இலங்கை வங்கி நடைமுறை கணக்கு | 70551597 | 1,468,149.38 | 674,784.38 |
| | இலங்கை வங்கி நடைமுறை கணக்கு | 3441122 | 0.00 | 0.00 |
| | இலங்கை வங்கி நடைமுறை கணக்கு | 3003335 | 0.00 | 0.00 |
| | உத்தியோகத்தர்களிடத்தில் கையிருப்பில் உள்ள தொகை | | 2,309.33 | 2,309.33 |
| | முத்திரைக் கணக்கு | | 15,490.50 | 14,868.50 |
| | ஏற்காத காசோலைகள் | | 0.00 | 0.00 |
| | | | 39,349,079.35 | 43,016,888.76 |

05-218

# நானாவித அறிவித்தல்கள்

## திருத்தம்

### ரிதீகம பிரதேச சபை

2022.10.28 அன்று வெளியிடப்பட்ட 2304 ஆம் இலக்க வர்த்தமானியின் அறிவிப்பு எண் 10-360-11 மற்றும் 2023 ஆம் வருடத்தில் சேவைக் கட்டணம் அறிவிப்பின் கீழ் இல. 4,5,6,13,18,20,21 பின்வருமாறு திருத்தப்பட வேண்டும். அத்துடன் எண் 22 உள்ளடங்க வேண்டும்.

வீ.ஏ.எஸ்.என். திலகரத்ன,
செயலாளர்,
ரிதீகம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ரிதீகம.
2023, ஏப்பிறல் 27.

4. கட்டிட வரை படத்தினை அனுமதிப்பதற்கான கட்டணம்

(அ) நாகரிக பிரதேசத்திற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்டத்திற்கு அமைய அறவிடப்படுவதுடன், கிராம பிரதேசங்களுக்காக அறவிடுதல் கீழ் காட்டப்பட்டுள்ளவாறாகும்.

| சதுர மீற்றர் | குடியிருப்பு ரூ.ச | வியாபாரம் அல்லது வேறு ரூ.ச |
|---|---|---|
| 45 இற்கு குறைந்த | 400.00 | 600.00 |
| 46-90 | 700.00 | 850.00 |
| 91-180 | 960.00 | 1200.00 |
| 181-270 | 1250.00 | 1350.00 |
| 271-450 | 1460.00 | 1600.00 |
| 451-675 | 1710.00 | 1850.00 |
| 676-900 | 1960.00 | 2100.00 |
| 901-1225 | 2210.00 | 2350.00 |
| 1225 இற்கு மேற்பட்ட அதிகரிக்கும் 90 சதுர மீற்றருக்கும் | 1100.00 | 1450.00 |

5. எல்லை மதில் கட்டமைப்பதற்கு உரிய வரைவு திட்டத்தினை அனுமதிப்பதற்கான கட்டணம் (ஒரு மீற்றருக்காக ஆகக்கூடிய 6)

| | | குடியிருப்பு ரூ. ச. | வியாபாரம் அல்லது வேறு ரூ.ச. |
|---|---|---|---|
| 1. | கட்டிட எல்லையின் வெளியில் | 200.00 | 500.00 |
| 2. | கட்டிட எல்லையினுள் | 500.00 | 750.00 |
| 3. | அனுமதிக்கப்படாத எல்லை மதில் | 1000.00 | 1500.00 |
| 4. | இணக்கம் வழங்குதல் (எல்லை மதில்) | 10.00 | 20.00 |

6. இணக்கச் சான்றிதழ் வழங்குவதற்கான கட்டணம் (சதுர மீற்றருக்காக)

| | குடியிருப்பு<br>ரூ.ச. | வியாபாரம் அல்லது வேறு<br>ரூ.ச. |
|---|---|---|
| சதுர மீற்றர் 50 மீறாத சந்தர்ப்பத்தில் | 1000.00 | 1200.00 |
| சதுர மீற்றர் 50-100 வரை | 1500.00 | 1700.00 |
| சதுர மீற்றர் 100-150 வரை | 2000.00 | 2300.00 |
| சதுர மீற்றர் 150-200 வரை | 2500.00 | 2800.00 |
| சதுர மீற்றர் 200 இற்கு மேற்பட்ட ஒவ்வொரு 50 சதுர மீற்றருக்கும் | 1000.00 | 1200.00 |
| காலத்தை நீடித்தல் ஒரு ஆண்டிற்கு | 750.00 | 1500.00 |

13.

(1) நூலக உறுப்புரிமை விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூ. 20.00
(2) நூலக உறுப்புரிமை கட்டணம் ரூ. 100.00
(3) நூலக உறுப்புரிமை புதுப்பிப்பதற்கான கட்டணம் ரூ. 50.00
(4) புத்தகங்களை மீள வழங்குவதற்கான காலதாமதக் கட்டணம்
1 நாள் தொடக்கம் 30 நாள் வரை ஒரு புத்தகத்திற்காக ஒரு நாளைக்கு ரூ. 1.00
31 நாள் தொடக்கம் 90 நாள் வரை ஒரு புத்தகத்திற்கு ரூ. 40.00
91 நாள் தொடக்கம் 180 நாள் வரை ஒரு புத்தகத்திற்கு ரூ. 80.00
180 இற்கு மேற்படுகின்ற நாட்களுக்காக ஒரு புத்தகத்திற்கு ரூ. 100.00

18. சுற்றாடல் உரிமப் பத்திரம் பெற்றுக் கொள்ளல்

(1) சுற்றாடல் பாதுகாப்பு உரிமப் பத்திரத்திற்காக விண்ணப்பப் படிவக் கட்டணம் ரூ. 150.00
(2) சுற்றாடல் பாதுகாப்பு உரிமப் பத்திரத்தினை புதுப்பிக்கும் விண்ணப்பப் படிவக் கட்டணம் ரூ. 25.00
(3) சுற்றாடல் உரிமப் பத்திரக் கட்டணம் ரூ. 1250.00
(4) புதிய சுற்றாடல் பாதுகாப்பு உரிமப் பத்திரத்திற்காக சோதனை கட்டணம்

| முதலீடு | சோதனைக் கட்டணம் |
|---|---|
| ரூ. இலட்சத்திற்கு கீழ்ப்பட்ட | ரூ. 1000.00 |
| ரூ. 100001-200000 | ரூ. 1500.00 |
| ரூ.200001-500000 | ரூ. 2500.00 |
| ரூ.500001-1000000 | ரூ. 5000.00 |
| ரூ. 1000001- 1500000 | ரூ. 7500.00 |
| ரூ.1500000 க்கு மேற்பட்ட | ரூ. 10000.00 |

20. வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான கட்டணம் அறவிடல்.

(1) ரிதீகம வைத்தியசாலையின் அருகில் வர்த்தக கட்டிடத் தொகுதியின் முன் பக்க வாகன தரிப்பிடத்தில் வாகனங்களை நிறுத்தி வைத்தல்.
ஆண்டு உரிமப்பத்திரக் கட்டணம் - ரூ. 2450.00

21. விற்பனை மேம்பாட்டு வேலைத்திட்டத்திற்காக கட்டணம் அறவிடல்

- ஒரு நாளுக்காக ஒரு சதுர அடியிற்கு இடத்தை வழங்குதல் ரூ. 50.00
- நடமாடும் துண்டு பிரசுரங்களை விநியோகிப்பதற்கு ஒரு நாளைக்காக ரூ. 3000.00
- நிறுவன வாகனம் ஒன்றினை பயன்படுத்துவதற்கு ஒருதினத்திற்கு ரூ. 5000.00

22. வரிப்பணம் ஏட்டின் பெயர் திருத்த விண்ணப்பப்படிவம் வழங்குவதற்கான கட்டணம் அறவிடப்படும் விண்ணப்பப்படிவ கட்டணம் ரூ. 250.00

05-189/1

---

திருத்தம்

**ரிதீகம பிரதேச சபை**

2022.10.28 அன்று வெளியிடப்பட்ட 2304 ஆம் இலக்க வர்ரத்தமானியின் அறிவிப்பு எண் 10-360-12 மற்றும் 2023 வருடத்தில் சொத்துக்களை வாடகைக்கு வழங்குதல் அறிவிப்பின் கீழ் எண் 1,8,9,10,17 பின்வருமாறு திருத்தப்பட வேண்டும்.

வீ. ஏ. எஸ். என். திலகரத்ன,
செயலாளர்,
ரிதீகம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ரிதீகம.
2023, ஏப்பிறல் 27.

1. பாட்டுக் கச்சேரிக்காக மைதானத்தை வாடகைக்கு வழங்குதல் (ஒரு தினத்திற்கு)

| | |
|---|---|
| தொடங்கஸ்லந்த விளையாட்டு மைதானம் | ரூ. 25000.00 |
| ஹேவாவிஸ்ஸ விளையாட்டு மைதானம் | ரூ. 25000.00 |
| ஏனைய பிரதேச சபை விளையாட்டு மைதானங்கள் | ரூ. 10000.00 |

* மேலுள்ள செயற்பாடுகளுக்காக பெற்றுக் கொள்ளும் விளையாட்டு மைதானம் முதலாம் நாளுக்கு மேற்படுகின்ற எல்லா நாடுகளுக்காகவும் 10% படி மீதமுள்ளவாறு தொகை வசூலிக்கப்படும்.

* 10 நாட்களுக்கு மேற்படுகின்ற எல்லா நாட்களுக்காகவும் 10 ஆம் நாளுக்காக அறவிடப்பட வேண்டிய தொகையினை அடிப்படையாகக் கொள்ளப்படும்.

* தொடங்கஸ்லந்த மற்றும் ஹேவாவிஸ்ஸ விளையாட்டு மைதானங்களை வாடகைக்கு வழங்குவ தற்கான பாதுகாப்பு பிணையாக ரூ. 30000.00 அறவிடப்படும்.

* ஏனைய பிரதேச சபை விளையாட்டு மைதானங்களை வாடகைக்கு வழங்குவதற்கான பாதுகாப்பு பிணையாக ரூ. 10000.00 அறவிடப்படும்.

8. கொடிக் கம்பம் வாடகைக்கு வழங்குதல்

| | |
|---|---|
| * ஒன்றுக்காக அதிகாரப் பிரிவினுள் (ஒரு தினத்திற்கு) | ரூ. 10.00 |
| கொடி கம்பங்களுக்கு பாதுகாப்பு பிணை வைப்புத் தொகை ஆகும். | ரூ. 5000.00 |

9. கொம்போஸ்ட் பசளை வழங்குதல்

| | |
|---|---|
| * சில்லறை (கிலோ கிராம் 1 இற்காக) | ரூ. 20.00 |
| * தொகை (கிலோ கிராம் 300 இற்கு மேற்பட்ட) | ரூ. 17.50 |

10. நீர பவுசர் 3300 லீட்டர் வாடகைக்கு வழங்குதல்

| | நீருடன் | நீரின்றி |
|---|---|---|
| ஒரு பவுசருக்காக (எரிபொருளுடன்) | ரூ. 2000.00 | ரூ. 3000.00 |
| தூரம் 1 கிலோ மீட்டருக்கு மேற்படுமாயின் மேலதிக 1 கிலோ மீட்டருக்கு | ரூ. 100.00 | ரூ. 100.00 |
| நீர் பவுசர் ஒரு தினத்திற்கு எரிபொருளுடன் (ஆகக்கூடிய 04 நீர் பவுசர்கள்) | ரூ. 6000.00 | ரூ. 12000.00 |

(இதற்கு மேலதிகமாக பெற்றுக் கொள்ளும் நீர் பவுசர்களுக்கு ஒரு பவுசருக்கான கட்டணம் அறவிடப்படும்)

17. ரிதீகம புதிய சந்தை கட்டிடத்தினையும் நிலப்பரப்பினையும் வாடகைக்கு வழங்குதல்

1. வாரச் சந்தை கட்டிடங்களுடனான நிலத்தினை வாடகைக்கு வழங்குதல் ஒரு தினத்திற்கு ரூ. 15000.00
   (ரூ. 10000.00 இற்கு பாதுகாப்பு பிணை வைப்பிற்கு உட்பட்டு)
2. வாரச் சந்தை கட்டிடத்தினையும் சந்தை நிலத்தின் சபை கட்டிடத்தின் மேடையுடன் வாடகைக்கு வழங்குதல் ஒரு தினத்திற்கு ரூ. 20000.00
   (ரூ. 15000.00 பாதுகாப்பு பிணை வைப்பிற்கு உட்பட்டு)

ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரச விடுமுறை தினங்களுக்கு மு.ப. 6.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணி வரையும் ஏனைய தினங்களுக்கு பி.ப. 4.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணி வரையும் வாடகைக்கு வழங்கப்படும்.

புதன் கிழமை மற்றும் சனிக் கிழமை தினங்கள் அரச விடுமுறை ஆனாலும் பி.ப. 4.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணி மாத்திரம் வரை வாடகைக்கு வழங்கப்படும்.

05-189/2

---

**கிழக்கு நுவரகம் பலாத பிரதேச சபை - விஜயபுர**

பிரசார விளம்பரப்பலகைக் கட்டணம் அறவிடல் - 2023

விளம்பரப் பலகை/ காட்சிப்படுத்தல்கள் தொடர்பான துணைச்சட்டத்தின் கீழ் பிரசார விளம்பரப் பலகை கட்டணங்கள் 2023 தொடர்பாக சபைத் தலைவர் எஸ். பி. குமாரதாஸ அவர்கள், கௌரவ அமைச்சரினால் செய்யப்பட்ட முன்மொழிவான, 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க படியான பிரதேச சபை சட்டத்தில் 122 (1) வது பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய 1980.08.23 ஆந் திகதிய இல. 520/07 இனைக் கொண்ட அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில், மாகாண உள்ளூராட்சி வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள துணைச் சட்டத்தின் 39 வது பிரிவில் பிரசார விளம்பரம்/காட்சிப்படுத்தல் சுற்றுச் சூழல் தொடர்பான துணைச்சட்டத்தின் விதிமுறைகளின்படி கிழக்கு நுவரகம் பலாத பிரதேச சபை எல்லைக்குள்ளான வீதிக்கு/ பாதைக்கு/ கால்வாய்க்கு/ கடலுக்கு அல்லது வானத்துக்கு தெரியும் வகையில் ஒரு சதுர அடிக்கு குறையாத விளம்பரங்கள் அல்லது கட்டுமானங்களை காட்சிப்படுத்துவதற்கு, கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் பிரசார விளம்பரப் பலகை கட்டணம் 2023 ஆம் வருடத்திற்காக விதித்து அறவிடல் வேண்டும் என்பது 2023, சனவரி 17 ஆந் திகதி நடாத்தப்பட்ட மாதாந்த சபைக் கூட்டத்தில் தீர்மான இல. 04 (இ) ஆனது மதிப்புக்குரிய பாராளுமன்ற உறுப்பினர் ஜே. ஏ. டி. விமலசிரி அவர்களினால் ஆமோதிக்கப்பட்டு சபையினரால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

ஜே. ஏ. எஸ். உதயசிறி,
செயலாளர்,
கிழக்கு நுவரகம் பலாத பிரதேச சபை,
விஜயபுர.

கிழக்கு நுவரகம் பலாத பிரதேச சபை,
விஜயபுர,
அநுராதபுரம்.
2023, மாச்சு 30.

| தொ. இல. | விபரம் | ஒரு வருடத்திற்கான கட்டணம் ரூ. சதம் |
|---|---|---|
| 1. | சுவரில் அல்லது பலகையில் காட்சிப்படுத்தப்படும் (திரைப்பட பிரசார விளம்பரம் தவிர) எந்த ஒரு விளம்பரத்திற்கும் ஒரு சதுர அடிக்கு | ரூ. 75.00 |
| 2. | எந்த வகையிலான விளம்பர பெனர்களுக்கும் ஒரு சதுர அடிக்கு/ கட்டவுட் | ரூ. 100.00 |

அட்டவனை 1-2 வரையில் விளம்பரங்கள் இரு பக்கத்திலும் காட்சிப்படுத்தப்படுமேயெனில் இந்த கட்டணம் இரு மடங்காகும்.

05-190

---

**மாவனல்லை பிரதேச சபை**

அறிவித்தல் பலகை கட்டணங்கள்

மாவனல்லை பிரதேச சபையின் செயலாளரான எஸ்.பீ.ஆர்.என்.பியரத்தின ஆகிய என்னால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9.3 பிரிவுடன் வாசிக்க வேண்டிய குறித்த சட்டத்தின் 221 மற்றும் 122, 126 ஆம் பிரிவுகளின் மூலம் எனக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 1988.08.23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க உள்ளூராட்சி அமைப்புக்கள் அதிவிஷேட வர்த்தமானப் பத்திரத்தில் IV (ஆ) பிரிவில் உள்ளூராட்சி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை கௌரவ அமைச்சர் அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டு மாவனல்லை பிரதேச சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நியம துணை விதிக்கேற்ப 39 ஆம் இலக்க பந்தியின் கீழ் 2023 ஆம் வருடத்திற்காக மாவனல்லை பிரதேச சபை நியாயாதிக்க எல்லையினுள் விளம்பர அறிவித்தல் பலகைகளை (பதாதைகள் உள்ளடங்கலாக) காட்சிப்படுத்துவதற்காக கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணங்களை 2023.01.01 ஆந் திகதியிலிருந்து 2023.12.21 ஆந் திகதி வரை அறவிடுவதற்கு 2023, ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதிய தீர்மான இலக்கம் 02 இன் கீழ் முடிவு செய்யவேண்டியேற்பட்டதாக இத்தால் அறிவித்தல் செய்கின்றேன்.

எஸ். பீ. ஆர். என். பியரத்தின,
செயலாளர்,
மாவனல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மாவனல்லை,
2023, ஏப்பிறல் 19.

**தீர்மானம்**

மாவனல்லை பிரதேச சபையின் செயலாளராகிய எஸ். பீ. ஆர். என். பியரத்தின ஆகிய என்னால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9.3 பிரிவின் பிரிவுடன் வாசிக்க வேண்டிய குறித்த சட்டத்தின் 221 ஆம் இலக்க மற்றும் 122, 126 ஆம் பிரிவுகளின் அதிகாரங்களின் பிரகாரம் 1988. 08. 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க உள்ளூராட்சி அமைப்புக்கள் அதி விஷேட வர்த்தமானப் பத்திரத்தில் IV (ஆ) பிரிவில் உள்ளூராட்சி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை கௌரவ அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டதும் மாவனல்லை பிரதேச சபை நியாயாதிக்க எல்லையினுள் காட்சிப்படுத்தப்படும் அனைத்து அறிவித்தல் பலகைகளிற்காக ( பதாகைகள் உள்ளடங்கலாக) கீழே அட்டவனையில் காட்டப்பட்டுள்ள கட்டணங்ளை 2023 வருடத்திற்கு விதித்து அறவிடுவதற்கு தீர்மானிக்கின்றேன்.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | அனுமதிப்பத்திரம் | ஒரு பஞ்சாங்க வருடத்திற்கான கட்டணம் | ஒரு மாதத்திற்கான கட்டணம் |
|---|---|---|---|
| 01 | நிரந்தர அறிவித்தல் பலகைகளை பொருத்துதல் (ஒரு சதுர அடிக்கு) | ரூபா 100.00 (காலத்திற்குக் காலம் அரசினால் விதிக்கப்படும் வரித் தொகைகள் உள்ளடங்கலாக) | |
| 02 | புடவை பதாதைகள் அல்லது விளம்பர அறிவித்தல்கள் (ஒரு சதுர அடிக்கு) | | ரூபா. 75.00 (காலத்திற்குக் காலம் அரசினால் விதிக்கப்படும் வரித் தொகைகள் உள்ளடங்கலாக) |
| 03 | எண்முறை (டிஜிட்டல்) அறிவித்தல் பலகையொன்று (ஒரு சதுர அடிக்கு) | ரூபா 300.00 (காலத்திற்குக் காலம் அரசினால் விதிக்கப்படும் வரித் தொகைகள் உள்ளடங்கலாக) | |

*05 - 166*

---

**சாவகச்சேரி பிரதேச சபை**

விளம்பரப் பலகைக் கட்டணம் -2023

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகளிள் சட்டத்தின் 122 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய பிரிவு 126 ஆம் உப பிரிவின் (vii) (ஊ) மற்றும் (xxx) இன்கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களிற்கு ஏற்பவும் மற்றும் 1988.08.23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பகுதி IV (ஆ) உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரால் பகிரங்கப்படுத்தியுள்ள (62/V 63/V 64/V) பக்கங்களில் விளம்பர அறிவித்தல் தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் யாராயினும் ஒருவரால் ஏதேனும் தெருவின் மீது அல்லது தெருவில் நீண்டு கொண்டிருக்கும் வண்ணம் விளம்பரப்பலகையினதும் வேறு தற்காலிக கட்டமைப்புக்களினதும் அல்லது எவ்வகையினதான எந்த அலங்காரத்தினதும் நிறுவுகையும் அல்லது நிறுவுகைக்கு ஏற்பாடு செய்தல் விடயத்திற்கு சாவகச்சேரி பிரதேச சபையிடம் அனுமதி பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். இவ்விடயமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 2021.07.08 ஆந் திகதிய 2235/ 54 ஆம் இலக்க இலங்கைச் சனாநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் பகுதி (1) தொகுதி (1) பிரசுரிக்கப்பட்டுள்ளதற்கு அமைவாகவும் கீழ்வரும் அட்டவணையின் பிரகாரமும் விளம்பரப்பலகைக் கட்டணங்கள் அறவிடுவதற்கு 10/15.12.2022 ஆம் இலக்க பிரதேச சபையின் தீர்மானத்திற்கு அமைவாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது.*

- *புதிதாக நிரந்தரமான விளம்பர அறிவித்தல் பலகை அமைக்கப்படும் போது உரிய ஆவணங்கள் மற்றும் பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்துடன் ரூபா 1000.00 அனுமதிக் கட்டணமாக செலுத்தப்படுதல் வேண்டும்.*

- *காட்சிப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தல் பலகைகள் ஆண்டுதோரும் மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன் உரிய கட்டணத்தை செலுத்தி புதுப்பிக்கப்படல் வேண்டும்.*

- *இருபக்கங்களிலுமான காட்சிப்படுத்தல் வைக்கப்பட்டிருப்பின் இரு பக்கங்களிற்கும் கட்டணம் அறவிடப்படல் வேண்டும் (மின்னொளி விளம்பர பலகைகள் தவிர்த்து)*

- *அனுமதியின்றி அமைக்கப்படும் அனைத்து வகையான விளம்பர அறிவித்தல் பலகைகளிற்கும் சதுர அடிக்கு ரூபா 20.00 விளம்பர கட்டணத்துடன் தண்டமாக அறவிடப்படும்.*

1. சுவர் ஒன்றில் காட்சிக்கு வைக்கும் நிரந்தர விளம்பர அறிவித்தல் ஒவ்வொரு சதுர அடிக்கும் ஒரு வருடத்திற்கு ரூபா 100.00 கட்டணமாக அறவிடப்படும்.

2. பெனர் ஒன்றில் காட்சிக்கு வைக்கப்படும் தற்காலிக விளம்பர அறிவித்தலின் ஒவ்வொரு சதுர அடிக்கும் ஒரு வருடத்திற்கு ரூபா 80.00 கட்டணமாக அறவிடப்படும்.

### காணிகள் ஏல விற்பனை வரி - 2023

சாவகச்சேரி பிரதே சபையின் நிர்வாக எல்லைக்குள் இருக்கும் யாதாயினும் காணி ஒன்று ஏல விற்பனைதாரர் ஒருவரால் அல்லது புரோக்கர் ஒருவரால் அல்லது அவரின் பணிப்பாளர் அல்லது பிரதிநிதி ஒருவரால் ஏலத்தில் அல்லது வேறு விதமாகவோ விற்கப்படின் அவ்வாறான விற்பனையில் கிடைக்கும் பணத்தில் பிரதேச சபைகள் சட்டத்தின் 154 ஆம் பிரிவின் 1 ஆம் உப பிரிவின் கீழ் செலுத்தப்பட வேண்டிய நூற்றுக்கு ஒன்றுக்கு சமனான வரி விற்பவரால் அல்லது புரோக்கரால் அல்லது பணியாளரால் அல்லது அவரது பிரதிநிதியால் செலுத்தப்பட வேண்டும் என 10/15.12.2022 ஆம் இலக்க பிரதேச சபையின் தீர்மானத்திற்கமைவாக முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

### படிவக் கட்டணங்கள் சான்றிதழ் கட்டணங்கள் - 2023

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் படிவக் கட்டணங்கள் /சான்றிதழ் கட்டணங்கள் என்பன 10/15.12.2022 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின்படி பின்வருமாறு கட்டணங்களை அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**படிவக் கட்டணங்கள்**

| | (ரூபா) |
|---|---|
| 1. கட்டட விண்ணப்பப்படிவம் | 400.00 |
| 2. ஆதன பெயர் மாற்றப்படிவம் | 300.00 |
| 3. சுற்றுப்புறச் சூழல் படிவம் | 200.00 |
| 4. நூலக அங்கத்துவப்படிவம் | 50.00 |
| 5. மருத்துவ பரிசோதனைப்படிவம் | 100.00 |

**சான்றிதழ் கட்டணம்**

| | |
|---|---|
| 1. ஆதன உடைமைச் சான்றிதழ் கட்டணம் | 1000.00 |
| 2. எல்லைக்கோட்டுச் சான்றிதழ் கட்டணம் | |
| 3. சுவீகரிக்கப்படாமைக்கான சான்றிதழ் கட்டணம் | |
| 4. குடிபுகு சான்றிதழ் கட்டணம் (நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வர்த்தமானியின் பிரகாரம்) | |

### மண்டபம் வாடகைக்கு விடல் - 2023

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் சபைக்கு சொந்தமான மண்டப வாடகைக் கட்டணம் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு அறவிடப்படும் என 10/ 15.12.2022 ஆம் இலக்க பிரதேச சபையின் தீர்மானத்திற்கு அமைவாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

முழு நாள் வாடகைக் கட்டணம்

| | | |
|---|---|---|
| கொடிகாம நகர மண்டபம் | - | ரூபா 3000.00 |
| நாவற்குழி உப அலுவலக மண்டபம் | - | ரூபா 1500.00 |
| இதர மண்டபங்கள் | - | ரூபா 1000.00 |

*களியாட்ட வரி அறவீடு - 2023*

*களியாட்ட வரிக்கட்டண கட்டளைச் சட்டத்தின் 06 ஆவது பிரிவிற்கு ஏற்ப சாவகச்சேரி பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் பணம் அறவிட்டு காட்டப்படும் திரைப்படக் காட்சியொன்று, சர்க்கஸ் காட்சியொன்று, ஜாலவித்தை காட்சியொன்று, சங்கீத விழா காட்சியொன்று அல்லது எந்தவொரு காட்சியொன்றிற்காகவும் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு உல்லாச வரிக்கட்டணமொன்று கட்டளையிடப்பட்டு அறவிடுவதற்கு சாவகச்சேரி பிரதேச சபை 10/15.12.2022 ஆந் திகதிய தீர்மானத்தின் மூலமாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

*பிரதேச சபை எல்லைக்குள் நடைபெறும் எந்தவொரு காட்சியொன்றிற்காகவும் அச்சிடப்பட்ட உட்பிரவேசிக்கும் சீட்டுகளின் பெறுமதியின் நூற்றுக்கு பத்து (10%) வீதம் களியாட்ட வரியாக அறவிடப்படும்.*

*தேசிய சூழல் சட்டத்தின் கீழான அறிவித்தல் - 2023*

*மத்திய சுற்றாடல் அதிகார சபையானது 1980 ஆம் ஆண்டில் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டம் 28 ஆம் பிரிவுக்கமைவாக 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின்படி மத்திய சூழல் தவிசாளரினால் குறித்த சட்டத்தின் 2002 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆந் திகதிய 1159/ 22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பகுதி IV (ஆ) இல் பிரசுரிக்கப்பட்ட அதே கட்டணங்களும் அதே நிபந்தனைகளுக்கு அமைவாக 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் கீழ்க் காட்டப்படும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரதேச சபையின் தவிசாளலருக்கு கையளித்ததன் கீழ் சாவகச்சேரி பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் இச்சட்டத்தை அமுல்படுத்துவதோடு கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கைத்தொழில்கள் மீது மத்திய சூழல் அதிகார சபையினால் குறித்துரைக்கப்பட்டவாறு படிவங்கள், கட்டணங்கள், பரீட்சித்தற் கட்டணங்கள், உத்தரவுப் பத்திரக் கட்டணங்கள் ஆகியவை விதித்து அறவிடப்படல் வேண்டும் என்றும் 10/15.12.2022 ஆம் இலக்க சபையின் தீர்மானத்திற்கமைவாக முடிவு செய்யப்பட்டது என்றும் இத்தால் அறியத்தருகின்றேன். பிரதேச சபை சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப் பத்திரம் ஒன்றுக்காக ரூபா 4000.00 மற்றும் வரிகளும் அறவிடப்படும். சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப் பத்திரம் ஒவ்வொரு தடவையும் புதுப்பிக்கும் (மூன்று வருடத்துக்கு ஒரு தடவை) போது சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுக் கட்டணமாக ரூபா 4000.00 மற்றும் வரிகளும் அறவிடப்படும்.*

*அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு கட்டணம் - 2023*

*1987 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க களியாட்ட வரி திருத்தச் சட்டத்தின் கீழ் சாவகச்சேரி பிரதேச சபைகள் எல்லைக்குள் அதிஷ்டலாபச் சீட்டிழுப்பினை மேற்கொள்வோர் உரிமக் கட்டணமாக ரூபா 1000.00 செலுத்தப்படல் வேண்டும். சமூக அபிவிருத்தி நிறுவனங்களுக்கு சபையால் வரி விலக்களிப்பு அளிக்கப்பட்டிருப்பின் உரிமக் கட்டணமாக ரூபா 1000.00 மட்டும் அறவிடப்படும் எனவும் வரி விலக்களிப்பு அளிக்கப்படவில்லை எனின் உரிமக் கட்டணத்துடன் பற்றுச்சீட்டின் பெறுமதியில் 5% கட்டணமாக அறவிடப்படும் எனவும் 10/15.12.2022 ஆம் இலக்க பிரதேச சபையின் தீர்மானத்திற்கமைவாக முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*கழிவுகள் மற்றும் கல், மண், கட்டிட இடிபாடுகள் அகற்றல் கட்டணம் - 2023*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 93 மற்றும் 1988.08.23 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின்பிரிவு 9 (4) இன் கீழ் சபையின் எல்லைக்குள் உழவு இயந்திரம் மூலம் கழிவுகளை அகற்றுவதற்கு பின்வருமாறு கட்டணங்களை அறவிடுவது என 10/15.12.2022 ஆம் இலக்க சபைத் தீர்மானத்திற்கமைவாக தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

| | |
|---|---|
| 1. குப்பைக் கழிவுகள் அகற்றுதல் 1 உழவு இயந்திரம் லோட் | ரூபா. 2000.00 |
| 2. கோழிக்கழிவுகள் அகற்றுதல் 1 உழவு இயந்திரம் லோட் | ரூபா. 2000.00 |
| 3. கல், மண் கட்டட இடிபாடுகள் உழவு இயந்திரம் 1 உழவு இயந்திரம் லோட் | ரூபா. 2500.00 |
| 4. உடைந்த கண்ணாடிகள், ஓடுகள் அகற்றுவதற்கு ஒரு உரப்பை கட்டணம் | ரூபா. 100.00 |
| 5. கடைக்கழிவுகள் ஒரு உரப்பைக் கட்டணம் | ரூபா. 100.00 |

*குறிப்பு:*

மேற்படி கட்டணம் கொடிகாமம் நகரப்பகுதியிலிருந்து 5KM தூரத்திற்கு மட்டும் இக்கட்டணம் பொருந்தும். 5KM இற்கு மேற்பட்ட ஒவ்வொரு KM இற்கும் ரூபா 50.00 போக்குவரத்துக் கட்டணமாக அறவிடப்படும்.

அரசாங்க பாடசாலைகளுக்கு விசேட கட்டணமாக ஒரு தடவைக்கு ரூபா 1000.00

*** தேநீர் கடைகள் மற்றும் உணவகங்களில் அவற்றின் வகைக்கேற்ப குப்பைகள் அகற்றுவதற்கான மாதாந்தக் கட்டணம் பின்வருமாறு அறவீடு செய்யப்படும்.**

1. சாதாரண குப்பைகள் அகற்றுதல் மாதாந்தக் கட்டணம் வியாபார நிறுவனங்கள், தேநீர் கடைகள் மற்றும் உணவகங்களில் அவற்றின் வகைக்கேற்ப முறையே ரூபா. 200.00, ரூபா. 500.00 அறவிடப்படும்.

2. பிளாஸ்ரிக், பொலித்தீன், Lunch Sheet போன்ற குப்பைகள் அகற்றுதலுக்கான மாதாந்தக் கட்டணம் வியாபார நிறுவனங்கள் தேனீர்க் கடைகள் மற்றும் உணவகங்களில் அவற்றின் வகைக்கேற்ப முறையே ரூபா. 2000, 3000, 5000.

பொதுவான கட்டண அறவீடுகள் - 2023

சாவகச்சேரி பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் பின்வரும் விடயங்களுக்காக உரிய முன்னனுமதியானது சாவகச்சேரி பிரதேச சபையிடம் பெறப்படல் வேண்டும் என்பதுடன் அதற்குரிய கட்டணங்களும் செலுத்தப்பட வேண்டும் என 10/15.12.2022 ஆம் இலக்க பிரதேச சபையின் தீர்மானத்திற்கமைவாக முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

1. விளம்பரப்படுத்தல் நிகழ்வுகள் நாள் ஒன்றிற்கு ரூபா 1000.00 அறவிடப்படும்.
2. பொது இடங்களில் நடமாடும் விற்பனை நிலையங்கள் நாள் ஒன்றிற்கு ரூபா 400.00 அறவிடப்படும்.
3. பொது இடங்களில் நடமாடும் மீன் வியாபாரம் நாள் ஒன்றிற்கு ரூபா 300.00 அறவிடப்படும்.
4. சபைக்கு சொந்தமான பொதுச்சந்தைகளில் வியாபாரம் செய்வதற்கு இடவாரியாக சதுர அடிக்கு நாள் ஒன்றிற்கு ரூபா 1.50 அறவிடப்படும். (01.01.2024 ஆந் திகதியிலிருந்து ரூபா 2.50 அறவிடப்படும்.)
5. பதிவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டி சங்கங்களிடமிருந்து தரிப்பிடக் கட்டணமாக மாதாந்தம் ஒரு முச்சக்கரவண்டிக்கு ரூபா 500.00 அறவிடப்படும்.
6. கட்டட விண்ணப்ப அங்கீகாரத்திற்கான கால நீடிப்பு கோரும் சந்தர்ப்பங்களில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட கால நீடிப்புக்களுக்கு வருடமொன்றுக்கு ரூபா 2000.00 அறவிடப்படும்.
7. உற்சவகால விசேட தற்காலிக உரிமக் கட்டணங்கள் (நாளொன்றுக்கு)

| *விபரம்* | *கட்டணம்* |
|---|---|
| 1. சிறிய அளவிலான துணி விற்பனை கடை (10' X 05') | 500.00 |
| 2. பெரிய அளவிலான துணி விற்பனைக்கடை | 1000.00 |
| 3. உலோகப் பொருட்கள் விற்பனை கடை | 750.00 |
| 4. சிறிய அளவிலான கச்சான் கடை (10' X 05') | 200.00 |
| 5. பெரிய அளவிலான கச்சான் கடை | 500.00 |
| 6. அழகுசாதன பொருட்கள் விற்பனை கடை | 750.00 |
| 7. இனிப்புக்கடை | 500.00 |
| 8. விளையாட்டு பொருட்கள் விற்பனை கடை | 750.00 |
| 9. சுண்டல் வடை வண்டி வியாபரம் | 250.00 |
| 10. ஐஸ்கிறீம் வான் | 500.00 |
| 11. ஐஸ்கிறீம் கடை | 3000.00 |
| 12. ஏனையவைகள் | 500.00 |

### கட்டிடம் அமைத்தலுக்கான அனுமதியும் கட்டணங்கள் விதித்தலும் -2023

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 21 ஆம் பிரிவினால் 78 ஆம் அத்தியாயங்களின் 1988.18.25 ஆந் திகதிய 520/ 7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பகுதி IV (ஆ) உள்ளூராட்சி அமைச்சர் அவர்களினால் வெளியிடப்பட்டுள்ள துணை விதிகளின் 08 ஆம் பிரிவின் கீழ் சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் புதிதாக கட்டப்படவுள்ள கட்டிடங்களுக்கு பிரதேச சபையின் அனுமதியும், பரீட்சித்தல் கட்டணமும் அமைக்கப்பட்ட கட்டடங்களிற்கான தண்டமும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் 2021.07.08 ஆந் திகதிய 2235/54 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானியின் பகுதி (1) தொகுதி (1) இல் பிரசுரிக்கப்பட்டுள்ளதற்கு அமைவாக அறவிடப்படுவதற்கு 10/ 15.12.2022 ஆம் இலக்க சபையின் தீர்மானத்திற்கமைவாக முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

### கழிவுறிஞ்சி சேவைக் கட்டணம் - 2023

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 93 இன் கீழ் சாவகச்சேரி பிரதேச சபையானது கழிவுறிஞ்சி சேவையை வழங்குவற்கு பின்வருமாறு கட்டணங்களை அறவிடுவதற்கு 10/15.12.2022 ஆம் இலக்க சபையின் தீர்மானத்திற்கமைவாக பின்வருமாறு கட்டணங்களை அறவிட முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

**சபை எல்லைக்குள்**

- 1வது லோட் அகற்றல் கட்டணம் ரூபா 6,500.00
- அடுத்துவரும் ஒவ்வொரு லோட் ரூபா 5,000.00 (14 நாட்களினுள் மட்டும்)
- கழிவு நீர் 1 லோட் ரூபா 2,500.00

சபை எல்லைக்கு வெளியே கழிவகற்றல் கட்டணத்துடன் மேலதிகமாக போக்குவரத்து கட்டணமாக மேலதிக ஒவ்வொரு கிலோ மீற்றரிற்கும் ரூபா 100.00 அறவிடப்படும்.

### ரோலர் வாடகைக் கட்டணம் - 2023

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 93 இன் கீழ் சாவகச்சேரி பிரதேச சபையானது ரோலர் சேவையை வழங்குவதற்கு 10/15.12.2022 ஆம் இலக்க பிரதேச சபையின் தீர்மானத்திற்கமைவாக பின்வருமாறு கட்டணங்களை அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

01. அதிர்வு உருளை - 01 மணித்தியலத்திற்கு - ரூபா 3000.00
    - நாளொன்றுக்கு குறைந்தது 04 மணித்தியாலங்களுக்கான கட்டணம் செலுத்திய பின்னரே ரோலர் வாடகைக்கு வழங்கப்படும். பயன்படுத்தாத மேலதிக நாள் ஒவ்வொன்றிற்கும் தரிப்பிட கட்டணம் ரூபா 2000.00 (02 நாட்களுக்கு மேற்படலாகாது.)

02. சாதாரண உருளை - நாளொன்றுக்கு ரூபா 1000.00
03. ரோலர் ஏற்றியிறக்குவதற்கான சேவையை பிரதேச சபை மட்டுமே வழங்கும் என்பதுடன் அதற்கான அறவீடுகள் பின்வருமாறு :

**சபை எல்லைக்குள்**

- ரோலர் ஏற்றி இறக்குவதற்கு 01 தடவைக்கு ரூபா 10,000.00
- மேலதிக நாள் ஒவ்வொன்றிற்கும் தரிப்பிட கட்டணம் ரூபா 1000.00 (02 நாட்களுக்கு மட்டுமே)

**சபை எல்லைக்கு வெளியே**

- ரோலர் ஏற்றி இறக்குவதற்கு 01 தடவைக்கு ரூபா 15,000.00
- மேலதிக நாள் ஒவ்வொன்றிற்கும் தரிப்பிட கட்டணம் ரூபா 1000.00 (02 நாட்களுக்கு மட்டும்)

*சோலைவரி அறவிடல் - 2023*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் கைதடி, நாவற்குழி உப அலுவலகங்களில் முன்னைய ஆண்டு அறவிடப்பட்டது போன்று வரிகளும் உரிய காலத்தினுள் செலுத்தப்படும் வரிகளுக்கு கழிவும், உரிய காலத்திற்குள் செலுத்தப்படாத வரிகளுக்கு தண்டமும் அறவிடுவதென 10/15.12.2022 ஆம் இலக்க பிரதேச சபையின் தீர்மானத்தின்படி முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு ரிக்கற் கட்டணம் - 2023*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் கீழ் சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைக்குள் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் நடாத்துபவர்கள் உரிமக்கட்டணமாக ரூபா 1000.00 செலுத்தப்படல் வேண்டும். சமூக அபிவிருத்தி நிறுவனங்களிற்கு பிரதேச சபையால் வரி விலக்களிப்பு அளிக்கப்பட்டிருப்பின் உரிமக்கட்டணமாக ரூபா 1000.00 மட்டும் அறவிடப்படும் எனவும் வரி விலக்களிப்பு அளிக்கப்படவில்லை எனின் உரிமக்கட்டணத்துடன் பற்றுச்சீட்டின் பெறுமதியில் 5% உம் கட்டணமாக அறவிடப்படும் எனவும் 10/15.12.2022 ஆம் இலக்க சபையின் தீர்மானத்திற்கமைவாக முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*கோழி இறைச்சி விற்பனை பற்றிய அறிவித்தல் - 2023*

*201 ஆம் பிரிவின் இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டத்துடன் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கமைய பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற பொது மக்களின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தை பாதுகாக்கும் நோக்குடனும் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய பிரிவு 126* (ix) *(ஓ) இற்கு அமைவாக பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களிற்கு ஏற்பவும் 23.08.1998 ஆந் திகதிய இலங்கைச் சனநாயகச் சோலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி பகுதி* IV *(ஆ) உள்ளூராட்சியில் வெளியிடப்பட்ட உள்ளூராட்சி அதிகார சபையின் துணைவிதிகள் சட்டத்தின் பாகம்* II *இன் 33 ஆம் பந்தி பகிரங்க சந்தைகளின் கீழ் உள்ளூர் அதிகார சபைகளுக்கு கையளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரமும் 10/15.12.2022 ஆம் இலக்க பிரதேசசபை தீர்மானப் பிரகாரம் சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட பொது சந்தைகளின் அமைவிடத்திலிருந்து 900*M *(0.9 கிலோ மீற்றர்) சுற்றுவட்டத்தினுள் கோழி இறைச்சி விற்பனை செய்தல் அல்லது நுகர்வோருக்கு கோழிகளை உயிருடன் தனித்தனியாக விற்பனை செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*குழாய்க்கிணறு அமைத்தலுக்கான அனுமதி - 2023*

*தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் (யாழ்ப்பாணம்) குழாய்க்கிணறு அமைத்தல் தொடர்பான நடைமுறைகளுக் கமைவாகவும், 10/15.12.2022 ஆம் இலக்க பிரதேச சபையின் தீர்மானத்திற்கு அமைவாகவும் சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் குழாய்க்கிணறு அமைப்பதாயின் பிரதேச சபையிடம் முன் அனுமதி பெற்று செயற்படுத்தல் வேண்டும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*படவரைஞரை/ஒப்பந்தகாரரை பதிவு செய்தல் கட்டணம் - 2023*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் படவரைஞரைப் பதிவு செய்வதற்கு 10/15.12.2022 ஆம் இலக்க பிரதேச சபையின் தீர்மானத்திற்கமைவாக முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

| | | |
|---|---|---|
| *01.* | *படவரைஞரைப் பதிவு செய்தல் கட்டணம்* | *ரூபா 3000.00* |
| *02.* | *புதுப்பித்தல் கட்டணம்* | *ரூபா 2000.00* |
| *03.* | *ஒப்பந்தக்காரரைப் பதிவு செய்தல்* | *ரூபா 3000.00* |

*விளையாட்டு மைதான கட்டண அறவீடு - 2023*

*சபைக்குச் சொந்தமான விளையாட்டு மைதானங்களில் நடாத்தப்படும் விளையாட்டு நிகழ்வுகளுக்கு, அந்நிகழ்வுகளை நடாத்துவோரால் நிகழ்வுக்காக சேகரிக்கப்படும் கட்டணங்களில் 10% செலுத்தப்படல் வேண்டும் என 10/15.12.2022 ஆம் இலக்க பிரதேச சபையின் தீர்மானத்திற்கமைவாக முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*துவிச்சக்கரவண்டி பதிவுக்கட்டணம் அறிவித்தல் – 2023*

*1987 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் சட்டத்தின் 148 (4) ஆம் அட்டவணையில் தெரிவிக்கப்பட்டதான துவிச்சக்கரவண்டி பதிவுக்கட்டணம் ரூபா 25.00 அறவிடுவதென 10/15.12.2022 ஆம் இலக்க பிரதேச சபையின் தீர்மானத்திற்கமைவாக முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*நாய்கள் பதிவுக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 272) – 2023*

*சாவகச்சேரி பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் வளர்க்கப்படும் நாய்களிற்கான பதிவு 1987 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் சட்டத்தின் 9(3) ஆம் பிரிவின்படி 2023 ஆம் ஆண்டிற்கான பதிவுக் கட்டணம் நாய் ஒன்றிற்கு ரூபா 40.00 விதிக்கப்பட்டுள்ளது என 10/ 15.12.2022 ஆம் இலக்க பிரதேச சபையின் தீர்மானத்திற்கமைவாக முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*மரக்கறி விற்பனை – 2023*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் 126 (1ஓ) ஒ இன் பிரகாரமும் 1998.08.23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பகுதி IV(ஆ) இல் பிரசுரிக்கப்பட்ட உள்ளூராட்சி அதிகார சபையின் துணைவிதிகள் சட்டத்தின் பாகம் II இன் 33 ஆம் பந்தி பகிரங்க சந்தைகளின் கீழ் உள்ளூர் அதிகார சபைகளிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி சாவகச்சேரி பிரதேச சபையின் 10/15.12.2022 ஆம் இலக்க பிரதேச சபையின் தீர்மானத்திற்கமைவாக சாவகச்சேரி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பொதுச்சந்தைகளின் அமைவிடத்திலிருந்து 0.9 கிலோ மீற்றர் (900M) சுற்று வட்டத்திலிலுள்ள வியாபார நிலையங்கள் நடமாடும் விற்பனை மற்றும் நடைபாதை விற்பனை என்பவற்றில் மரக்கறி வியாபாரம் செய்தல் அல்லது காட்சிப்படுத்தி வைத்தல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

*நீர் வழங்கல் சேவைக்கட்டணம் – 2023*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 114, 118 இன் கீழ் சாவகச்சேரி பிரதேச சபையானது குடிநீர் சேவையை வழங்குவற்கு பின்வருமாறு கட்டணங்களை அறவிடுவது என 10/15.12.2022 ஆம் இலக்க பிரதேச சபையின் தீர்மானத்திற்கமைவாக முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

- *குடிநீர்க் கட்டணம்*
  *01 L – ரூபா 01.00*

- *குடிநீர் தாங்கி*
  *1000 L – ரூபா 500.00*

- *குடிநீர்த்தாங்கியுடன் குடிநீர் கொண்டு சென்று வழங்கல்*
  - *3500 L – 01 தடவை – ரூபா 2000.00*
  - *6000 L – 01 தடவை – ரூபா 3000.00*

- *குடிநீர் கட்டணத்துடன் போக்குவரத்து கட்டணம் மேலதிகமாக அறவிடப்படும். போக்குவரத்துக் கட்டணம் விபரம்*
  *முதல் 05 KM - 500.00*
  *அடுத்து வரும் ஒவ்வொரு KM இற்கும் ரூபா - 50.00*

*கொல்களங்களை நடைமுறைப்படுத்தல் – 2023*

*பிரதேச சபை அதிகார எல்லைக்குள் கொள்களங்களை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல் போன்றன தொடர்பாக 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கமைய பிரதேச*

*சபை அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற பொது மக்களின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தை பாதுகாக்கும் நோக்குடனும், 201 ஆம் பிரிவினால் ஊன்வினைஞர் கட்டளைச் சட்டத்துடன் III ஆம் பிரிவிற்கமைவாகவும் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 102 மற்றும் 122 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126 (ix) (I) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டும் சாவகச்சேரி பிரதேச சபையின் 10/ 15.12.2022 ஆம் இலக்க பிரதேசசபை தீர்மானத்திற்கமைவாகவும் கொல்களத்தில் கொல்லப்படும் ஒவ்வொரு மாட்டுக்கும் தலா 100.00 படி கட்டணம் அறவிடப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

*உயர் தொழில் வியாபாரக் கட்டணம் -2023*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 152(1) ஆம் பிரிவின் கீழ்க்காட்டப்படும் தொழில்களிற்கு கட்டணமாக ரூபா 3000.00 உம் மற்றும் வரிகளும் அறவிடுவதற்கு 10/15.12.2022 ஆம் இலக்க பிரதேச சபையின் தீர்மானத்திற்கமைவாக முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

**வியாபாரத்தின் உயர்தொழில் பட்டியல்**

1. நில அளவையாளர்
2. சட்டத்தரணி, நொத்தாரிசு
3. ஏலதாரர்
4. தரகர்
5. தரகு முகவர்கள்
6. கல்யாண தரகர்கள்
7. கட்டட வேலை ஒப்பந்தக்காரர்கள்
8. பணமுதலீடு செய்பவர்கள்
9. தொழில் முகவர்கள்
10. பிரயாண முகவர்கள்
11. கொமிசன் பிரதிநிதிகள்
12. பணம் கடன் கொடுப்போர்
13. மோட்டார் வாகனம் ஓட்டப்பயிற்றும் நிறுவனம் வைத்திருத்தல்
14. கொம்பியூட்டர் பயிற்சி அளிக்கும் தாபனத்தை வைத்திருத்தல்
15. கணக்குப் பரிசோதனை தாபனத்தை வைத்திருத்தல்
16. சுற்றுலா பஸ் சேவை நடாத்துதல்
17. பொதிகளை ஏற்றி இறக்கும் சேவைகளை நடாத்துதல்
18. கட்டட நிர்மாணக் கலை அல்லது வரைபடம் வரையும் நிறுவனத்தை வைத்திருத்தல்
19. காப்புறுதி முகவர்கள்
20. உள்ளூர் வர்த்தக வங்கி நிறுவனங்கள்
21. உள்ளூர் வங்கி நிறுவனங்கள்
22. கூட்டுறவு வங்கி நிறுவனங்கள்
23. வெளிநாட்டு வங்கி நிறுவனங்கள்
24. தனியார் பாடசாலைகள்
25. நகை அடகு பிடிப்பவர்கள்
26. வைத்திய சேவையாளர்,தனியார் மருத்துவ மனைகள்
27. Co-op city வைத்திருத்தல்
28. Food city வைத்திருத்தல்
29. காட்சி அறைகள் வைத்திருத்தல்
30. தொலைத்தொடர்பு கோபுர உரிமக் கட்டணம்
31. திருமண மண்டபம், ஹோட்டல்கள், விடுதிகள், உறங்கு மனைகள்
32. குளிர்பானத் (வாயுப்பானத்) தொழிற்சாலைகள்
33. வங்கி தன்னியக்க இயந்திர சேவை நிலையங்கள்
34. வாகன எரிபொருள் நிரப்பு நிலையம்
35. மதுபானம் உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்கள்
36. வாகன விற்பனை நிலையங்கள்

*கட்டாக்காலியாகத் திரியும் மிருகங்களை தடை செய்தல் -2023*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச்சட்டத்தின் 66 ஆவது பிரிவின் (1) மற்றும் (2) ஆம் உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய சாவகச்சேரி பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வீதியில் அல்லது அதனை சூழவுள்ள இடங்களில் திரியும் ஏதாவது எருமை, மாடு, ஆடு பிடித்து விடுவிக்கும் போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கட்டணங்கள் அறவிடப்படுமென 10/15.12.2022 ஆந் திகதிய சபைத் தீர்மானத்திற்கமைவாக அறியத்தருகின்றேன்.*

1. *மிருகம் ஒன்று பிடிக்கப்பட்டால் பின்வருமாறு கட்டணம் அறவிடப்படும்*

| | |
|---|---|
| *பிடிகூலி* | *ரூபா 1000.00* |
| *தண்டப்பணம்* | *ரூபா 1000.00* |

2. *மிருகத்தினை 24 மணி நேரத்திற்குள்ளாக மீட்டுக்கொள்ள தவறும் பட்சத்தில் மேலதிக நாள் ஒன்றுக்கு பராமரிப்பு செலவாக ரூபா 500.00 அறவிடப்படும்.*

*அவ்வாறு தடை செய்யப்படும் மிருகங்களுக்கான மேற்கூறிய கட்டணத்தைச் செலுத்தி மீட்டுக் கொள்ளத் தவறினால் மிருகங்கள் கைப்பற்றப்பட்டு 10 நாட்களில் தடை செய்யப்பட்ட மிருகங்கள் பிரசித்த ஏல விற்பனையில் விற்கப்படுவதுடன் ஏலத்தில் கிடைக்கும் பணம் பிரதேச சபையின் கணக்கில் வரவு வைக்கப்படும்.*

*வியாபார உரிமம் /வரி -2023*

*1989 ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் இரண்டாவது பிரிவின் 1 ஆம் உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் (2) ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சருக்கு உரித்தான தத்துவங்களின் பிரகாரம் வடமாகாண உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட 2017.03.24 ஆந் திகதிய 2011/25 ஆம் இலக்க இலங்கைச் சனாநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானியின் IV (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ள நியமத் துணைவிதிகள், சாவகச்சேரி பிரதேச சபையின் 10/15.12.2022 ஆந் திகதிய தீர்மானம் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச்சட்டத்தின் 123 (2) ஆவது பிரிவின்கீழ் 2029 ஆம் இலக்க 2017.07.21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் IV (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதற்கு அமைவாக, வடமாகாண சபையின் நியமத்துணை விதிகளின் பிரகாரம் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் கீழ்க் குறிப்பிடப்படும் வியாபாரக் கைத்தொழில் நிறுவனங்களை நடாத்திச் செல்வதை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல் போன்றன தொடர்பாக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கமைய பிரதேசசபை அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற பொது மக்களின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தை பாதுகாக்கும் நோக்குடனும், குறித்த சட்டத்தின் 122 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126 (IX), 126 (XXIII) ஆம் பிரிவின் உப பிரிவுகளின் கீழும் மற்றும் 147, 148, 149, 150, 152 (1), 154 ஆம் பிரிவுகளின் கீழும் பிரதேச சபைக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டும், சாவகச்சேரி பிரதேசசபையின் 10/16.12.2021 ஆம் இலக்க சபைத் தீர்மானத்திற்கமைவாகவும் கீழே குறிப்பிடப்பட்ட அட்டவணைகளில் தரப்பட்ட வியாபார, கைத்தொழில் நிறுவனங்களில் இருந்து 2023 ஆம் ஆண்டுக்கான உரிமக்கட்டணங்களும் வரிகளும் 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் மூன்று மாதங்களிற்குள் சாவகச்சேரி பிரதேசசபையின் உப அலுவலகங்களான கச்சாய், கைதடி, நாவற்குழி, வரணி, சரசாலை, மிருசுவில் அலுவலகங்களில் செலுத்துவதுடன் ஒவ்வொரு ஆண்டும் மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன் செலுத்தப்படல் வேண்டும்.*

***அட்டவணை***

| | | *ரூபா சதம்* |
|---|---|---|
| *1.* | *தேநீர்க்கடை வைத்திருத்தல்* | *500.00* |
| *2.* | *தேநீரும் சாப்பாட்டுக்கடையும் வைத்திருத்தல்* | *1000.00* |
| *3.* | *இருப்பிட வசதியுடன் ஒரு விடுதி வைத்திருத்தல்* | *1000.00* |
| *4.* | *ஒரு சாதாரண சாப்பாட்டுக்கடையை வைத்திருத்தல்* | *750.00* |
| *5.* | *ஒரு பேக்கரி வைத்திருத்தல் - உற்பத்தி* | *1000.00* |
| *6.* | *ஒரு பேக்கரி வைத்திருத்தல்- விற்பனை* | *1000.00* |
| *7.* | *ஒரு களைப்பாறும் இடத்தை வைத்திருத்தல்* | *1000.00* |
| *8.* | *முடி வெட்டும் இடத்தை வைத்திருத்தல்* | *750.00* |
| *9.* | *ஒரு சலவைக்கடை வைத்திருத்தல்* | *500.00* |
| *10.* | *பீடி, சுருட்டு தயாரிக்கும் நிலையத்தை வைத்திருத்தல்* | *750.00* |

| | | ரூபா சதம் |
|---|---|---|
| 11. | ஆட்டிறைச்சிக்கடை வைத்திருத்தல் | 1000.00 |
| 12. | வேறு மாமிசங்களை விற்கும் கடையை வைத்திருத்தல் | 1000.00 |
| 13. | மீன் விற்கும் கடையை வைத்திருத்தல் | 1000.00 |
| 14. | மினி சினிமா காட்டும் இடத்தை வைத்திருத்தல் | 1000.00 |
| 15. | செங்கல் அல்லது ஓடுகளை களஞ்சியப்படுத்தல் | 1000.00 |
| 16. | மட்பாண்டங்களை உற்பத்தி செய்தல் அல்லது விற்பனை செய்தல் | 1000.00 |
| 17. | கட்டடப் பொருட்கள் விற்பனை செய்தல் அல்லது வைத்திருத்தல் | 1000.00 |
| 18. | இரும்புப் பொருட்கள் விற்பனை செய்தல் அல்லது வைத்திருத்தல் | 1000.00 |
| 19. | பழைய இரும்புப்பொருடக்ளை விற்பனை அல்லது வைத்திருத்தல் | 1000.00 |
| 20. | சீமெந்து 25 பொதிக்கு மேல் விற்பனை அல்லது வைத்திருத்தல் | 1000.00 |
| 21. | மரக்காலை வைத்திருத்தல் - தளபாட உற்பத்தி | 1000.00 |
| 22. | மரக்காலை வைத்திருத்தல்- தளபாட விற்பனை | 1000.00 |
| 23. | பனை மரக்காலை வைத்திருத்தல் அல்லது விற்பனை செய்தல் | 1000.00 |
| 24. | விறகுக்காலை வைத்திருத்தல் | 1000.00 |
| 25. | தச்சுத்தொழிற்சாலை வைத்திருத்தல் | 1000.00 |
| 26. | வீட்டுத்தளபாடம் செய்தல் அல்லது விற்பனை செய்தல் | 1000.00 |
| 27. | இயந்திரம் மூலம் மரமறுக்கும் ஆலை - பலகை, மரம் உற்பத்தி | 1000.00 |
| 28. | பலகை மரம் விற்பனை | 1000.00 |
| 29. | கையினால் மரமறுக்கும் காலை வைத்திருத்தல் | 1000.00 |
| 30. | இயந்திர இரும்பு பட்டறை வைத்திருத்தல் | 1000.00 |
| 31. | இரும்பு பட்டறை வைத்திருத்தல் (கம்மாலை) | 750.00 |
| 32. | சுவையூட்டும் பானம் தயாரிக்கும் இடம் வைத்திருத்தல் | 750.00 |
| 33. | பனிக்கட்டி தயாரிக்கும் இடம் வைத்திருத்தல் | 750.00 |
| 34. | பனிக்கட்டி விற்பனை செய்தல் | 750.00 |
| 35. | ஐஸ்கிறீம் உற்பத்தி செய்தல் | 750.00 |
| 36. | ஐஸ்கிறீம் குளிர்பானம் விற்பனை செய்தல் | 750.00 |
| 37. | மிட்டாய் உற்பத்தி | 500.00 |
| 38. | இனிப்பு டொபி விற்பனை செய்தல் | 500.00 |
| 39. | பழவகை பானங்கள் உற்பத்தி செய்தல் விற்பனை செய்தல் | 750.00 |
| 40. | மரக்கறி கடை வைத்திருத்தல் (அனுமதிக்கப்படட்வை) | 500.00 |
| 41. | பழவகை விற்பனை செய்தல் | 500.00 |
| 42. | பாற்சாலை வைத்திருத்தல் | 1000.00 |
| 43. | பால் சேகரித்தல் விற்பனை செய்தல் | 750.00 |
| 44. | கொப்பரா தயாரித்தல் அல்லது வைத்திருத்தல் | 1000.00 |
| 45. | 50 கலனுக்கு மேல் தேங்காய் எண்ணெய் வைத்திருத்தல் | 1000.00 |
| 46. | தேங்காய் சேகரித்தல் விற்பனை செய்தல் | 1000.00 |
| 47. | இயந்திரம் மூலம் தேங்காய் எண்ணெய் தயாரித்தல் | 1000.00 |
| 48. | தென்னந்தும்புகள் உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்தல் | 1000.00 |
| 49. | தும்புத்தடி அல்லது ஈர்க்குத்தடி உற்பத்தி செய்தல் | 500.00 |
| 50. | ஆபரணங்களை தயாரித்தல் அல்லது பழுது பார்த்தல் | 1000.00 |
| 51. | ஆபரணங்கள் விற்பனை செய்தல் | 1000.00 |
| 52. | மின்முலாம் பூசும் இடம் வைத்திருத்தல் | 1000.00 |
| 53. | மொத்த வியாபாரத்திற்காக 10 அந்தருக்கு மேல் மா, சீனி, பருப்பு, அரிசி, உப்பு வைத்திருத்தல் | 1000.00 |
| 54. | பெட்டிக்கடை வைத்திருத்தல் | 400.00 |
| 55. | 03 அந்தருக்கு மேல் தேயிலை வைத்திருத்தல் | 1000.00 |
| 56. | பலசரக்குக்கடை வைத்திருத்தல் | 750.00 |
| 57. | சிறிய பலசரக்கு கடை வைத்திருத்தல் | 500.00 |
| 58. | அரிசி - உற்பத்தி | 750.00 |
| 59. | அரிசி - விற்பனை | 750.00 |
| 60. | பப்படம் உற்பத்தி விற்பனை | 750.00 |
| 61. | பனங்கட்டி உற்பத்தி, விற்பனை செய்தல் | 750.00 |
| 62. | கடலை விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500.00 |

| | | ரூபா சதம் |
|---|---|---|
| 63. | பழவகைகள் அல்லது வேறு உணவுப்பொருட்களை தகரத்தில் அடைக்கும் பொருட்களை வைத்திருத்தல் | 1000.00 |
| 64. | மிருகங்களுக்கான தீன்கடை வைத்திருத்தல் | 750.00 |
| 65. | கோழிகளிற்குரிய தீன் உற்பத்தி செய்தல் அல்லது விற்பனை செய்தல் | 750.00 |
| 66. | கோழி மிருகங்களுக்கான தீன் உற்பத்தி செய்தல் | 750.00 |
| 67. | கள்ளு சேகரிக்கும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை வைத்திருத்தல் | 1000.00 |
| 68. | வைக்கோல் கடை வைத்திருத்தல் | 500.00 |
| 69. | வெற்று போத்தல்கள், சாக்குகள் சேகரித்தல் | 500.00 |
| 70. | பழைய புதினப்பத்திரிகை சேகரித்தலும் விற்பனை செய்தலும் | 500.00 |
| 71. | 25 இற்கு மேல் புதிய அல்லது பழைய ரயர் வைத்திருத்தல் | 500.00 |
| 72. | சைக்கிள் திருத்துமிடம் வைத்திருத்தல் | 400.00 |
| 73. | மோட்டார் சைக்கிள் திருத்துமிடம் வைத்திருத்தல் | 750.00 |
| 74. | மோட்டார் வாகனங்கள் திருத்துமிடம் வைத்திருத்தல் | 1000.00 |
| 75. | வேல்டிங் கராஜ் வைத்திருத்தல் | 1000.00 |
| 76. | தகர வேலை செய்யுமிடத்தை வைத்திருத்தல் | 1000.00 |
| 77. | லேத் இயந்திரம் வைத்திருத்தல் | 1000.00 |
| 78. | ஸ்பிரே, பெயின்டிங், நிலையத்தை வைத்திருத்தல் | 1000.00 |
| 79. | பற்றரிகளை திரும்ப பலமூட்டும் அல்லது பழுது பார்க்கும் இடத்தை வைத்திருத்தல் | 1000.00 |
| 80. | மோட்டார் வாகனங்களிற்கு பொடி இணைக்கும் நிலையத்தை வைத்திருத்தல் | 750.00 |
| 81. | மெத்தை செய்யும் நிலையத்தை வைத்திருத்தல் | 1000.00 |
| 82. | ரயர்களையும் ரியூப்களையும் வல்கனைசிங் செய்யுமிடத்தை வைத்திருத்தல் | 750.00 |
| 83. | ரயர்களை மீள் புதுப்பிக்கும் நிலையத்தை வைத்திருத்தல் | 1000.00 |
| 84. | மோட்டார் வாகனங்களுக்கான ரயர், ரியூப்களை விற்பனை செய்யும் நிலையத்தை வைத்திருத்தல் | 1000.00 |
| 85. | மோட்டார் வாகன உதிரிப்பாகங்களை விற்பனை செய்தல் | 1000.00 |
| 86. | சைக்கிள் உதிரிப்பாகங்களை விற்பனை செய்தல் | 750.00 |
| 87. | குளிரூட்டிகளை உற்பத்தி செய்தல், திருத்துதல் சேகரித்தல் | 1000.00 |
| 88. | குளிரூட்டும் பெட்டிகளையும் அதிகுளிரூட்டும் பெட்டிகளையும் தயாரித்தலும் திருத்துதலும் | 1000.00 |
| 89. | மின்பொருட்கள் விசிறிகள் மோட்டார் திருத்துமிடம் | 750.00 |
| 90. | தொலைக்காட்சிப்பெட்டி, வானொலிப்பெட்டி திருத்துமிடம் | 750.00 |
| 91. | தட்டச்சு, இரட்டிப்பு இயந்திரம் திருத்துமிடம் | 750.00 |
| 92. | தொலைக்காட்சிப்பெட்டி, வானொலிப்பெட்டி உதிரிப்பாகங்கள் வைத்திருத்தல் | 1000.00 |
| 93. | தொலைக்காட்சிப்பெட்டி, வானொலிப்பெட்டி விற்பனை செய்யும் நிலையம் வைத்திருத்தல் | 1000.00 |
| 94. | மின்சாரப்பொருடக்ளை விற்பனை செய்தல் | 1000.00 |
| 95. | மணிக்கூடு திருத்துமிடம் வைத்திருத்தல் | 500.00 |
| 96. | புதிய சைக்கிள் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 1000.00 |
| 97. | பெற்றோல், டீசல் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 1000.00 |
| 98. | புதினப்பத்திரிகை கடை அல்லது விநியோகம் செய்தல் | 500.00 |
| 99. | கையினால் இயங்கும் அச்சியந்திரசாலை வைத்திருத்தல் | 1000.00 |
| 100. | மின்சக்தியால் இயங்கும் அச்சியந்திரசாலை வைத்திருத்தல் | 1000.00 |
| 101. | பொது விளம்பர சேவை நிலையம் வைத்திருத்தல் | 1000.00 |
| 102. | வைத்திய நிபுணர்ஆலோசனை சேவை நிலையம் வைத்திருத்தல் | 1000.00 |
| 103. | தனிப்பட்ட மிருக வைத்தியசாலை வைத்திருத்தல் | 1000.00 |
| 104. | தனிப்பட்ட ஆயுர்வேத வைத்தியசாலை வைத்திருத்தல் | 1000.00 |
| 105. | தனிப்பட்ட மேற்கத்திய வைத்தியசாலை வைத்திருத்தல் | 1000.00 |
| 106. | மேற்கத்திய மருந்து வகைகளை வைத்திருத்தல், விற்பனை செய்தல் | 1000.00 |
| 107. | ஆயுர்வேத மருந்து வகைகளை வைத்திருத்தல், விற்பனை செய்தல் | 1000.00 |
| 108. | கைத்தறி வைத்திருத்தல் | 1000.00 |

| | | ரூபா சதம் |
|---|---|---|
| 109. | உடைகள் தயாரிக்கும் நிலையம் வைத்திருத்தல் | 1000.00 |
| 110. | துணிகளிற்கு சாயமூட்டும் நிலையம் அல்லது அச்சிடும் நிலையம் வைத்திருத்தல் | 1000.00 |
| 111. | தையல்கடை வைத்திருத்தல் | 750.00 |
| 112. | தைத்த தயாரித்த உடுப்புகள் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 1000.00 |
| 113. | கமத்தொழில் இரசாயனப்பொருட்கள் உற்பத்தி செய்தல் அல்லது வைத்திருத்தல் | 750.00 |
| 114. | தோல் பொருட்கள் சப்பாத்துக்கள் உற்பத்தி செய்தல் | 1000.00 |
| 115. | காலணிகளை விற்பனை செய்தல் | 1000.00 |
| 116. | ஆடம்பரப் பொருட்கள் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 750.00 |
| 117. | சவர்க்காரம் உற்பத்தி செய்தல் | 750.00 |
| 118. | பிளாஸ்டிக்பொருட்கள் உற்பத்தி செய்தல் | 1000.00 |
| 119. | பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை செய்தல் | 1000.00 |
| 120. | பீ.வீ.சீ.குழாய்களை உற்பத்தி செய்தல் அல்லது வைத்திருத்தல் அல்லது விற்பனை செய்தல் | 1000.00 |
| 121. | சுண்ணாம்பு அல்லது சுண்ணாம்புக்கற்களை வைத்திருத்தல் | 500.00 |
| 122. | பெயின்ற் வானிஸ் பூச்சுக்களை விற்பனை செய்தல் | 1000.00 |
| 123. | 50 கோழிகளுக்கு மேல் பண்ணை வைத்திருத்தல் | 1000.00 |
| 124. | நெல், அரிசி மா அரைக்கும் ஆலை வைத்திருத்தல் | 1000.00 |
| 125. | மிளகாய், கோப்பி அரைக்கும் ஆலை வைத்திருத்தல் | 1000.00 |
| 126. | செக்கு அல்லது கை இயந்திரம் மூலம் எண்ணெய் உற்பத்தி, விற்பனை | 1000.00 |
| 127. | கண்ணாடி பொருட்கள் அல்லது மட்பாண்டங்களை உற்பத்தி செய்தல் அல்லது விற்பனை செய்தல் | 750.00 |
| 128. | கண்ணாடி உற்பத்தியும் விற்பனையும் | 1000.00 |
| 129. | படம் பிரேம் போடுமிடம் வைத்திருத்தல் | 1000.00 |
| 130. | விளையாட்டுப் பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை | 1000.00 |
| 131. | அலுமினியப் பொருட்கள் உற்பத்தி அல்லது விற்பனை | 1000.00 |
| 132. | படம் பிடிக்கும் ஸ்ரூடியோ வைத்திருத்தல் | 1000.00 |
| 133. | பாட்டுக்களையும் சங்கீதங்களையும் ஒலிப்பதிவு செய்யும் நிலையத்தை வைத்திருத்தல் | 1000.00 |
| 134. | தொலைக்காட்சி சினிமா கெசட்டுக்களை விற்பனை அல்லது வாடகைக்கு விடுதல் | 500.00 |
| 135. | போட்டோ பிரதி எடுக்கும் கடை வைத்திருத்தல் | 750.00 |
| 136. | விசேட வைபவங்களுக்கான பொருட்களை வாடகைக்கு விடும் நிலையத்தை வைத்திருத்தல் | 1000.00 |
| 137. | மரணச்சடங்குகளுக்கு தேவையான பொருட்களை உற்பத்தி செய்தல் அல்லது விற்பனை செய்தல் | 750.00 |
| 138. | கற்பூரம் உற்பத்தி செய்தல் | 500.00 |
| 139. | வார்ப்பு உலோக தொழிற்சாலை வைத்திருத்தல் | 1000.00 |
| 140. | பாடசாலைப் புத்தகங்கள் காகிதங்கள் சேகரித்தல் | 1000.00 |
| 141. | காணி விற்பனை நிலைய அலுவலகங்களை வைத்திருத்தல் | 1000.00 |
| 142. | புகையிலை போறணை வைத்திருத்தல் | 750.00 |
| 143. | வியாபார நோக்கு தொலைத்தொடர்பு, பெக்ஸ் சேவை | 750.00 |
| 144. | அரிசி ஆலை, கோட்டா மில் வைத்திருத்தல் | 1000.00 |
| 145. | கல்வி நிலையம் | 1000.00 |
| 146. | பலநோக்குக்கூட்டுறவு சங்க கிளைகள் | 1000.00 |
| 147. | கணிணிப்பயிற்சி நிலையைம் வைத்திருத்தல் | 1000.00 |
| 148. | வாகன சுத்திகரிப்பு நிலையம் வைத்திருத்தல் | 1000.00 |
| 149. | ஒலி, ஒளி வாடகைக்கு விடல் | 750.00 |
| 150. | ஒரு குறோசுக்கு மேல் சுவையூட்டும் பானம் விற்பனை செய்தல் | 500.00 |
| 151. | தீப்பெட்டி தயாரித்தல் | 500.00 |
| 152. | அரிசி விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500.00 |
| 153. | குளிரூட்டப்பட்ட மீன் அல்லது இறைச்சி வைத்திருத்தல் | 500.00 |
| 154. | மீன் இறைச்சி காய வைத்தல், விற்பனை செய்தல் | 750.00 |
| 155. | மோட்டார் வாகனம் பராமரிக்கும் இடம் வைத்திருத்தல் | 750.00 |
| 156. | மின்சாரப் பொருட்கள் உற்பத்தி செய்தல் | 1000.00 |

| | | ரூபா சதம் |
|---|---|---|
| 157. | தண்ணீர் பம் உற்பத்தி செய்தல் | 1000.00 |
| 158. | பெற்றோலிய வாயு விற்பனை | 1000.00 |
| 159. | சவப்பெட்டி தயாரித்தல் விற்பனை செய்தல் | 1000.00 |
| 160. | தொலைத்தொடர்பு உபகரண விற்பனை | 750.00 |
| 161. | மூக்குக்கண்ணாடி விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 1000.00 |
| 162. | புடவை விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 1000.00 |
| 163. | உல்லாசப்பயணச் சேவை நிலையம் நடாத்துதல் | 1000.00 |
| 164. | வெளிநாட்டு முகவர் நிலையம் நடாத்துதல் | 1000.00 |
| 165. | உடல் வலுவூட்டல் நிலையம் நடாத்துதல் | 1000.00 |
| 166. | அழகுக்கலை நிலையம் நடாத்துதல், கேக் ஐசிங் தயாரித்தல் | 1000.00 |
| 167. | ஒலிபெருக்கி வாடகைக்கு விடல் | 750.00 |
| 168. | நடமாடும் ஐஸ்கிறீம் விற்பனை அல்லது ஏனைய நடமாடும் விற்பனை | 750.00 |
| 169. | வெற்றிலைக்கடை, பீடாக்கடை வைத்திருத்தல் | 500.00 |
| 170. | பேக்கரி உற்பத்தி விற்பனை | 500.00 |
| 171. | தையல் இயந்திரம் திருத்துவோர் | 500.00 |
| 172. | மரக்கன்று உற்பத்தி | 750.00 |
| 173. | பண்ணை வைத்திருத்தல் | 500.00 |
| 174. | மிக்சர் உற்பத்தி | 500.00 |
| 175. | மிக்சர் விற்பனை | 500.00 |
| 176. | புத்தகம் கட்டுதல் | 500.00 |
| 177. | தனியார் சொகுசு பஸ் சேவை நடாத்துதல் | 750.00 |
| 178. | பஸ் ஆசனப் பதிவு செய்தல் | 500.00 |
| 179. | கருவாட்டுக்கடை வைத்திருத்தல் | 750.00 |
| 180. | சைக்கிள், மோட்டார் சைக்கிள் விற்பனை | 1000.00 |
| 181. | விவசாய உபகரணங்கள் விற்பனை | 1000.00 |
| 182. | கனரக வாகனங்களை திருத்துதல் | 1000.00 |
| 183. | அதிஸ்டலாபச் சீட்டிழுப்புக் கட்டணம் | 500.00 |
| 184. | NET CAFE வைத்திருத்தல் | 750.00 |
| 185. | உடைகள் தயாரிக்கும் நிலையம் வைத்திருத்தல் | 1000.00 |
| 186. | கனரக வாகனங்களை வைத்திருத்தல் அல்லது வாடகைக்கு விடுதல் | 1000.00 |
| 187. | ஒளியூட்டல் சாதனம் வாடகைக்கு விடல் | 750.00 |
| 188. | நெல் அரிசி ஆலை வைத்திருத்தல் | 1000.00 |
| 189. | Cable TV இணைப்பு வாடகைக்கு விடல் | 750.00 |
| 190. | Hotel வைத்திருத்தல் | 1000.00 |
| 191. | அலுமினியப் பொருட்கள் உற்பத்தி | 1000.00 |
| 192. | மாட்டிறைச்சிக்கடை வைத்திருத்தல் | 1000.00 |
| 193. | கோழி இறைச்சிக்கடை வைத்திருத்தல் | 1000.00 |
| 194. | கிரவல் அல்லது கல்லுடைக்கும் ஆலை வைத்திருத்தல் | 1000.00 |
| 195. | கல்லுடைக்கும் ஆலையில் கல் விற்பனை | 1000.00 |
| 196. | சீமெந்துப் பொருட்கள் உற்பத்தி செய்தல் | 1000.00 |
| 197. | பொருட்கள் களஞ்சியப்படுத்தும் இடம் வைத்திருத்தல் | 1000.00 |
| 198. | அந்திம கால சேவைகள் பொறுப்பேற்பவர்கள் | 1000.00 |
| 199. | பிரத்தியேக கல்வி நிலையங்கள் நடாத்துதல் | 1000.00 |
| 200. | காளான் உற்பத்தி | 1000.00 |
| 201. | பாதுகாப்பு சேவை வழங்கல் | 1000.00 |
| 202. | குடிநீர் விற்பனை மற்றும் சுத்திகரிப்பு நிலையங்கள் வைத்திருத்தல் | 1000.00 |
| 203. | வாகன Sticker ஒட்டும் நிலையங்கள் வைத்திருத்தல் | 1000.00 |

செயலாளர்,
பிரதேசசபை,
சாவகச்சேரி.

05 - 288

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.